மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்

அ.வ.எண். 69/2022

பெயர் – முத்துமுனியம்மாள் (வா.சா.1)

நாள் – 07.08.2023

பிரதிவாதி தரப்பில் செய்யப்பட்ட கு.வி.

நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்றால் சாத்தூர் மின்சார வாரியத்தில் கணக்கீட்டளாராக பணிபுரிந்து வருகிறேன். நான் மின்சார வாரியத்தில் 2014ம் ஆண்டு கரூர் மாவட்டம் ஆண்டிப்பட்டி கோட்டை என்ற ஊரில் வேலைக்கு சேர்ந்தேன். அதற்கு பின்னிட்டு சிவகாசிக்கு பணிமாறுதல் பேரில் வந்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி முத்துச்சாமியின் தகப்பனார் மற்றும் எனது தாயாரும் உடன்பிறந்தவர்கள் என்றால் உடன்பிறந்தவர்கள் என்று சொல்வார்கள். ஆனால் எனக்கு தெரியவில்லை. நான் கந்தசாமியை எந்த ஆண்டு திருமணம் செய்தேன் என்றால் 1998ம் ஆண்டு திருமணம் செய்தேன். கந்தசாமிக்கும் எனக்கும் துளசிராஜா எனும் ஆண்குழந்தை உள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் வாகனவிபத்தில் 2002ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் செய்யாறில் ஏற்பட்ட வாகன விபத்தில் இறந்துவிட்டார். 2002ம் ஆண்டு எனது கணவரின் இறப்புக்கு பின்னிட்ட காலம் மற்றும் எனக்கு 2014ம் ஆண்டு வேலை கிடைத்த காலத்திற்கு இடைப்பட்ட காலத்தில் நான் எனது மகனுடன் வசித்து வந்தேன் என்றால் எனது மகனுடன் எனது தாய் தகப்பனாருடன் வசித்து வந்தேன். எனது பிராதில் மேற்படி விதமாக எனது தாய் தகப்பனாருடன் வாழ்ந்து வந்ததாக சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எனது கணவர் வாகன விபத்தில் இறந்ததற்கான நஷ்ட ஈட்டு தொகை வந்தது என்றால் ஐந்து லட்சத்து பத்தாயிரம் வந்தது. அந்த இழப்பீட்டு தொகையில் எனது பங்காக இரண்டு லட்சம் ரூபாய் கிடைத்தது என்றால் சரிதான். எனது மகனுக்கு இரண்டு லட்சம் ரூபாயும், எனது கணவரின் தாயாருக்கு ஒரு லட்சம் ரூபாயும் இழப்பீடு ரூபாய் கிடைத்தது என்றால் 2006 ஆண்டு எனது மகனுக்கு இழப்பீட்டு தொகையில் இருந்து ஒரு லட்ச ரூபாயும் எனது மாமியாருக்கு இரண்டு லட்சம் ரூபாயும் கிடைத்தது. எனது கணவர் இறப்புக்கு பின்னிட்டு நான் தனியாக இருந்த போது பிரதிவாதிதான் எனது துணையாக இருந்தார் என்றால் சரியல்ல. உறவினர் என்றமுறையில் அவ்வப்போது வந்து போவார். பிரதிவாதி இருக்கன்குடி மாரியம்மன்கோவிலில் பக்தர்கள் வந்து தங்குவதற்கான ஷெட்,

குளிப்பதற்கான பம்புஷெட் ஆகியவற்றை வாடகைக்கு வைத்து தொழில் செய்தார் என்றால் இருக்கலாம். அந்த தொழில் மூலமாக அவருக்கு ஆண்டுக்கு வருமானமாக ஐந்து லட்சம் வந்திருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. ஆர்.ஆர்.நகர் விருதுநகரில் நான் வாடகைக்கு குடியிருந்தேன் என்றால் எனது மகனின் படிபபிற்காகவும்,நான் லேப் டெக்னீசியன் படித்துள்ளதால் நான் வேலை செய்யவேண்டும் என்பதற்காக எனது பெற்றோர்கள் என்னை தனியாக அங்கு குடி வைத்தார்கள். இந்த விவரத்தை வழக்கிலும், நிரூபண உறுதிக்கூற்றிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிதான் ஆர்.ஆர்.நகரில் வீடு பிடித்து என்னையும் எனது மகனையும் அங்கு குடி வைத்திருந்தார் என்றால் சரியல்ல. பிரதிவாதிதான் எனது மகனை விருதுநகர் ராம்கோ வித்யாலயா பள்ளியில் எல்கேஜி படிப்புக்கு சேர்த்துவிட்டார் என்றால் சரியல்ல. நான் தான் சேர்த்துவிட்டேன். ஆர்.ஆர்.நகரில் உள்ள வீட்டை எனக்கு யார் வாடகைக்கு எடுத்து கொடுத்தார்கள் என்றால் விவரத்தை அந்த வீட்டு உரியைளாரைவிசாரித்தார் தெரியவரும் என்றால் சரிதான். ராம்கோ வித்யாலயா பள்ளியில் எனது மகன் எல்கேஜி, யுகேஜி படித்தார் என்றால் சரிதான். அதற்கு பிறகு நான் சாத்தூரில் உள்ள காமராஜர்புரம் தெருவிற்கு வாடகைக்கு வந்துவிட்டேன் என்றால் சரிதான். எனது தகப்பனார் தான் அங்கு குடி வைத்தார். அந்த காமராஜர்புரம் தெருவில் உள்ள வீட்டில் நான், எனது மகன் மற்றும் பிரதிவாதி ஆகியோர் ஒன்றாக சேர்ந்து வாழந்து வந்தோம் என்றால் சரியல்ல. அவ்வப்போது பிரதிவாதி வந்து போவார். எனது தகப்பனார்தான் வீடு எடுத்து குடி வைத்தார். காமராஜர்புரம் தெருவில் உள்ள வீட்டை எனது தகப்பனார் வாடகைக்கு எடுத்து என்னை குடிவைத்தார் என்று வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. காமராஜர்புரம் தெருவில் உள்ள வீட்டில் ஒரு வருடம் இருந்தோம் என்றால் சரிதான். அதற்கு பிறகு படந்தால் வசந்தம் நகருக்கு வாடகைக்கு குடிபெயர்ந்து விட்டோம் என்றால் சரிதான். அங்கு வாடகைக்கு குடியிருந்த போதுதான் எனது கணவரின் இறப்பின் மூலம் கிடைத்த இழப்பீட்டு தொகையை வைத்து போக்குவரத்து நகரில் காலி இடம் கிரையம் பெற்றேன் என்றால் வீடுதான் கிரையம் பெற்றேன். எனது மகனுக்கு வந்த தொகையை வைத்து காலி இடம் கிரையம் பெற்றேன். பிராது தபசில் சொத்தானது 2009 ம் ஆண்டு கிரையம் பெற்றேன் என்றால் 2006 ம் ஆண்டு எனக்கு வந்த

பணத்தை வைத்து 2009ம் ஆண்டு வீட்டை கிரையம் பெற்றேன். 2009ம் ஆண்டு நான் தாவா சொத்தை கிரையம் பெற்ற போது தமிழ்நாடு மின்சார வாரியத்தில் வேலை பார்த்தேனா என்றால் இல்லை. பிரதிவாதியின் சொத்த உழைப்பின் மூலம் தாவா சொத்தை பிரதிவாதி எனது பெயர் மற்றும் பிரதிவாதியின் பெயரில் கூட்டாக கிரையம் பெற்றார் என்றால் சரியல்ல. உறவினர் என்ற முறையில் அவர் பெயரையும் சேர்த்து கிரைய பத்திரத்தில் காண்பித்துள்ளார். என்னை அந்த பத்திரத்தை படிக்க விடவில்லை. நம்பிக்கையின் பேரில் கையொப்பம் செய்தேன். கிரைய ஆவணத்தில் கிரையம் பெறுபவர்கள் மற்றும் கிரையம் கொடுப்பவர்களின் புகைப்படங்கள் ஒட்டிதான் கையொப்பம் செய்தார்கள் என்றால் சரிதான். நான் கவனிக்கவில்லை. கிரைய பத்திரத்தில் பிரதிவாதியின் பெயரை சேர்த்து உள்ள விவரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் லேட்டாகத்தான் தெரியவந்தது. ஆனால் பெரியவர்களை வைத்து பேசி முடிப்போம் என்று சொல்லியிருந்தேன். நான் வேலை பார்ப்பதால் காலதாமதம் ஆகிவிட்டது. அதன்பிறகு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். கிரைய பத்திரத்தில் பிரதிவாதியின் பெயர் சேர்க்கப்பட்ட விவரம் எனக்கு எந்த தேதியில் தெரியவந்தது என்றால் சரியாக ஞாபகம் இல்லை. அவ்வாறு தவறாக மோசடியாக தனது பெயரை பிரதிவாதி சேர்த்துள்ளதால் அவர் மீது நடவடிக்கை எதுவும் எடுத்தேனா என்றால் இல்லை. பெரியோர்களை வைத்து பேசி முடித்துக்கொள்ளலாம் என்று நினைத்தேன். பெரியோர்களை வைத்து பேசினோமா என்றால் எனது வேலை சூழ்நிலை காரணமாக பேச முடியவில்லை. பெரியோர்களை வைத்து பேசினோமா என்றால் எனது வேலை சூழ்நிலை காரணமாக பேச முடியவில்லை என்று நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிராது தபசில் சொத்தை கிரையம் பெற்ற பிறகு ரூ2,50,000/- செலவு செய்து அந்த வீட்டில் பிரதிவாதி மராமரத்து வேலை செய்தார் என்றால் சரியல்ல. மராமரத்து வேலையே பார்க்க வில்லை. பிராது தபசில் சொத்தை 2009ம் ஆண்டு கிரையம் பெற்ற பிறகு பிரதிவாதியின் பெயரில் அந்த வீட்டிற்கான தீர்வை ரசீது ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் பெயரில் தான் ஏற்பட்டுள்ளது. அந்த வீட்டிற்கான கதவு எண்.4/151 என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் 4/151 என்ற கதவு எண் கொண்ட வீட்டிற்காக தீர்வை ரசீது நகல் யார் பெயரில் உள்ளது என்றால் பிரதிவாதி முத்துசாமி பெயரில் 28.1.2012ம் தேதியில் அவர்

பெயரில் ஏற்பட்டுள்ளது. கிரைய பத்திரத்தை போலவே இந்த ரசீதையும் மோசடியாக பெற்றுள்ளார். அந்த கிரைய தீர்வை ரசீதுக்கான நகல் பி.வா.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் ஆதார் அட்டை நகல் யாருடையது என்றால் என்னுடையதுதான் அதில் உள்ள புகைப்படம் யாருடையது என்றால் என்னுடையது தான். அந்த விலாசத்தில் எனது கணவரின் பெயராக பிரதிவாதி முத்துச்சாமியின் பெயர்தான் உள்ளது என்றால் சரிதான். அவர் அவ்வாறாக தவறாக போட்டு வாங்கியுள்ளார். அந்த தவறை நான் சரிசெய்துவிட்டேன். வா.சா.1ன் ஆதார் அட்டை நகல் பி.வா.சா.ஆ.2 ஆகும். பிரதிவாதி முத்துச்சாமியின் பெயரில் உள்ள குடும்ப அட்டையில் 16.3.2012ல் முத்துமுனியம்மாள் மற்றும் எனது மகனான துளசிராஜனின் பெயரும் உள்ளது என்றால் சரிதான். அந்த குடும்ப அட்டை பிரதிவாதியே பெற்றுக்கொண்டார். எனக்கும் எனது மகனுக்குமான குடும்ப அட்டை எனது தகப்பனார் ஊரான நல்லாம்பட்டியில் இருந்தது. அதற்கு பிறகு சாத்தூருக்கு மாற்றிவிட்டேன். அந்த குடும்ப அட்டை நகல் பி.வா.சா.ஆ.3 ஆகும். நானும், பிரதிவாதியும் எனது கணவரின் இறப்புக்கு பின்னிட்டு கணவன் மனைவியாக வாழ்ந்துவந்தோம் என்றால் சரியல்ல. உறவினர் என்ற முறையில் வந்து போவார். ஏற்கனவே பிரதிவாதி எனது கணவர் இல்லை என்று நீதிமன்றம் மூலம் உத்தரவு பெற்றுள்ளேன். 2014ம் ஆண்டு எனக்கு வேலை கிடைத்துள்ளது பிரதிவாதியுடன் வாழ்ந்து வந்துள்ளேன் என்றாலும் வேலை கிடைத்த பிறகு பிரதிவாதியை என் வீட்டிற்கு வரக்கூடாது என விரட்டி விட்டேன் என்றால் சரியில்லை. அதனால் தான் பிரதிவாதி நான் அவரது மனைவி என்ற கோதாவில் மாண்பமை சாத்தூர் சார்பு நீதிமன்றத்தில் அவர் என்னை தன்னுடன் சேர்த்து வாழ வருமாறு ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ஏற்கனவே திருமணம் ஆகி ஒரு குழந்தை உள்ளது. அந்த வழக்கு எண். HMOP. 8/2020 என்றால் சரிதான். அந்த விசாரணையில் ஏற்கனவே பிரதிவாதி செய்திருந்த திருமணம் சட்டப்படி விவாகரத்து ஆகாத காரணத்தினால் HMOP. 8/2020 ஏற்புடையது அல்ல என தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதி என்னுடன் வாழ்ந்து வந்த காலத்தில் எனக்கு 2 பவுன் தங்க வளையல், 5 பவுன் தாலி கொடி, 2 பவுன் கம்மல், 5 பவுன் தொங்கு செயின் ஆகியவற்றை வாங்கி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. பிரதிவாதி தனக்கு சொந்த உழைப்பின் மூலம் கிடைத்த பணதத்தின் மூலம் தாவா சொத்தை தன்

பெயரிலும், என் பெயரிலும் சேர்த்து கூட்டாக கிரையம் பெற்றுள்ளதால் தாவா சொத்தில் எனக்கும், பிரதிவாதிக்கும் தலா பாதி பாகம் உள்ளது என்றால் சரியல்ல. அவர் என்னை ஏமாற்றி வாங்கிவிட்டார். அரசு வேலைக்கு செல்வது வரை நான் பிரதிவாதியின் வருமானத்தில் வாழ்ந்துவிட்டு எனக்கு அரசாங்க வேலை கிடைத்த பிறகு பிரதிவாதியை உதாசினப்படுத்தி தாவா சொத்தில் உள்ள பிரதிவாதியின் பங்கையும் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதியின் இருக்கன்குடி கோவிலில் உள்ள ஷெட்டில் எனக்கும் பாதி பாகம் உள்ளதாக காவல் துறையில் புகார் அளித்து அதில் பாதி பாகம் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. அவருடைய சொத்தில் எனக்கு எப்படி பாகம் வரும். பிராது தபசில் கண்ட சொத்தில் பிரதிவாதிக்கு சமபாகம் உள்ளதால் பிரதிவாதிக்கு எதிராக நான் நிரந்தரஉறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்தில் பிரதிவாதிக்கு பாகம் பிரிக்கக்கூடாது என்பதற்காககே நான் வழக்கில் சொல்லியுள்ள விவரங்களை சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய சொத்து எனக்கு கிடைக்க வேண்டும். பிராதில் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றாலும் என் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

மறுவிசாரணை – இல்லை.